**உள்ளூராட்சி மன்ற தேர்தல் : கலப்பு உறுப்பினர் பிரதிநிதித்துவ முறையை சவாலுக்கு உட்படுத்தும் தேர்தலுக்குப் பின்னரான பெறுபேறு காலம் பற்றிய அவதானிப்பு, கற்ற பாடங்கள் மற்றும் எதிர்கால நோக்கு**

**தன்னாட்சியுடைய ஆளுகை**

தற்போது இந்நாட்டின் பிரதேச ஆளுகையானது அதற்கேயுரிய சுயாதீனமான மற்றும் தன்னாட்சியுடைய ஆளுகை அலகாக நாட்டில் அமைத்துருவாக்கப்பட்டுள்ளது. இது பல நூற்றாண்டு காலமாக தொடர்ச்சியாக மலர்ச்சியடைந்து வந்த பிரதேச ஆளுகையின் வாய்ப்பு மற்றும் நல்லமுறையில் அடையப்பெற்றுள்ள தத்துவங்களை உள்ளடக்கிய பொறிமுறையாக மாற்றமடைந்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்நாட்டின் மூன்றாம் மட்டத்திலான ஆளுகைக் கட்டமைப்பாக மாற்றமடைந்துள்ள உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பானது, தமது முன்னேற்றம் தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்கின்ற மற்றும் மேற்படி தீர்மானங்களை பொது மக்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்காக அமுல்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ள சுயாதீன நிறுவனக் கட்டமைப்பாக மாறியுள்ளது. இந்த நிறுவனக் கட்டமைப்பின் உந்துசக்தியாக மாறியிருப்பது மக்கள் பிரதிநிதிகள், தமது சமுதாயத்திற்குள்ளேயே வாழும் அயலவர்களின் விருப்பத்தின் பேரில் உறுப்பினர் பதவிக்கு நியமனம் பெறுவதாகும். மேற்படி பிரதிநிதிகள் குழு இந்நாட்டின் பிரதிநிதித்துவ சனநாயகத்தை வலுவூட்டுகின்ற முக்கியமான சக்தியாக உள்ளது. இதற்கான காரணமாக அமைவது, பிரதேச ரீதியிலான சனநாயகத்தை மென்மேலும் தீவிரமான மற்றும் ஆழமான பயன்பாடாக மாற்றியமைக்காது வெற்றிரகரமான உள்ளூராட்சியை உருவாக்கிக் கொள்ள முடியாமையாகும். இதன் காரணமாகவே உள்ளூராட்சியானது பிரதேச ஆளுகையின் ஆணிவேராக உள்ளதென்று அரசியல் கோட்பாட்டாளரான திரு எலக்சி தொக்வில் கூறியுள்ளார்.

இந்த பிரதிநிதிகள் குழுவானது நான்கு வருடங்கள் எனும் குறுகிய காலப்பகுதிக்கு தமது வாக்காளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் மக்கள் வரம் அதாவது மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு பெற்றுக் கொள்ளும் அங்கீகாரத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய முறையானது, சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், யாராயினுமொரு பிரதிநிதி தமது பொறுப்பிலிருந்து நீங்கும் பட்சத்தில் வாக்காளர் ஒருவர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன. அவ்வாறான சூழமைவில் சமுதாயத்திலிருந்து எழுந்துவரும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதி முறையான வகைப்பொறுப்புக்கூறலுடனான ஆளொருவராக இருத்தல் வேண்டும் என்பது உறுதியான விடயமாகும்.

உலகின் பிரபல விஞ்ஞானியான திரு ஆதர் சீ. கிளார்க் ஒரு தடவை இவ்வாறு கூறியுள்ளார், “சனநாயகமானது நல்லது மற்றும் கெட்டது என்ற இரண்டு வாதங்களும் அடிக்கடி எமக்கு கேட்கக்கூடியதாக உள்ளது, சனநாயகமானது பூரணமானதல்ல, இதனை இற்றைப்படுத்தல் மற்றும் நாட்டுக்கு ஏற்றவகையில் ஒழுங்குபடுத்திக் கொள்வது அவசியமாகும். மேலும், பல நூற்றாண்டு காலமாக காணப்பட்டு வந்த சனநாயக, சம்பிரதாயங்களை நவீன

தொழில்நுட்பத்தின் உதவி கொண்டு மென்மேலும் மேம்படுத்த முடியும். துரிதமாக பூகோளமயமாக்கப்பட்டு வருகின்ற எமது உலகில் வறுமையை ஒழித்தல் மற்றும் சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமாயின், ஆட்சியமைப்பில் முறையான வகைப்பொறுப்புக் கூறும் தன்மை அவசியமாகும். இது மத்திய, மாகாண மற்றும் **உள்ளூராட்சி** ஆகிய சகல மட்டங்களில் இடம்பெறல் வேண்டும்''. இவ்வாறு அறிமுகம் செய்யப்படுகின்ற முறையான வகைப்பொறுப்புக் கூறலைக் கொண்ட பிரதிநிதியொருவரை தெரிவு செய்துகொள்வது அவ்வளவு இலகுவான விடயமல்ல. இதில் காணப்படுகின்ற சிக்கலான மற்றும் இலகுவற்ற நிலைமை பற்றி ஒரு முறை இலக்கிய ரீதியாக விபரிக்கையில் குமாரதுங்க முனிதாச அவர்கள் குறிப்பிட்டிருப்பது, ''ஒரு தந்தை தமது மிகவும் அழகிய மகளை திருமணம் செய்துவைப்பதற்கு தகுந்த துணையை தெரிவு செய்வதற்கு எவ்வாறு முயற்சிக்கின்றாரோ, அவ்வாறு வாக்காளர்களும் தகுந்த வேட்பாளரை தெரிவு செய்துகொள்வதற்காக போதியளவு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்'' என்றாகும். இவ்வாறு முயற்சிகளை மேற்கொள்கின்ற போதிலும் அதற்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டுமாயின், மிகவும் நியாயமான மற்றும் சிறந்த பண்புகளைக் கொண்ட உயர் மட்டத் தேர்தல் முறையியல் காணப்பட வேண்டும். இந்நாட்டின் வாக்காளர்களுக்கு ஏதேனும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்கின்ற முன்னெடுப்பானது மிகவும் முறையாக இந்நாட்டில் இடம்பெறுவது நூற்றாண்டுக்கும் மேலாகவாகும். சட்டவாக்கத்துக்கு தெரிவு செய்துகொள்வதானது மட்டுப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம் அல்லது ஆளுநரினால் பெயர் குறித்துரைக்கப்படுவது முதல் சாதாரண பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை வரை அமுலில் இருந்தது. எனினும் சாதாரண பெரும்பான்மை வாக்கெடுப்பின் போது மக்களின் விருப்பம் அவ்வாறே வெளிப்படுத்தப்படுவதில்லை என்ற அடிப்படையில் இந்நாட்டின் தேர்தல் முறையானது 1978 ஆம் ஆண்டு முற்றாக மாற்றியமைக்கப்பட்டது.

## <u>நிபந்தனையற்ற விருப்பு வாக்கு முறையை ஒழித்தல்</u>

அதாவது விகிதாசார தேர்தல் முறையின் மூலமாகும். இதற்கு விளைவாய்ந்தன்மைவாய்ந்ததாக சேர்க்கப்பட்ட விருப்பு வாக்கு முறையும் இந்நாட்டின் ஆளுகை மட்டங்கள் மூன்றுக்கும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுவது பொதுவான அம்சமாக இருந்தது. எனினும் காலம்செல்லச் செல்ல கட்டியெழுப்பப்பட்ட சமூகத்தின் கருத்தாக இருந்தது, விகிதாசார முறைக்கு கொண்டுசென்ற விருப்பு வாக்கு முறையானது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு மத்தியில் உருவாக்கிய அமைதியின்மையானது, கட்டுப்படுத்த முடியாத மட்டத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்பதாகும். இது தொடர்பிலான பல்வேறு வாதப் பிரதிவாதகங்கள் இன்று வரை வெளியிடப்பட்டு வருவதுடன், மேற்படி கருத்துக்களில் காணப்படுகின்ற பொதுவான பண்புகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது விருப்பு வாக்குமுறையானது, உடனடியாக ஒழிக்கப்பட வேண்டிய பாதகமான முறையாகும் என்று விபரிக்கின்ற விமர்சகர்கள் எவரும் அதில் காணப்படுகின்ற சாதகமான பண்புகள் பற்றிய வரவேற்கத்தக்க கலந்துரையாடலில் பங்கேற்பதில்லை என்பதாகும். அண்மைக்காலத்தில் எழுந்துள்ள மார்ச் 12 போன்ற தொண்டர் அடிப்படையிலான மக்கள் சக்திகள் தொடர்ந்தும்

தமது கவனத்தைச் செலுத்தியுள்ள பரிசுத்தமான அரசியல் கலாசாரத்தை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடுவதையும் இங்கு பதிலீடு செய்துகொள்ள முடியும்.

அதாவது இந்நாட்டில் பரிசுத்தமான அரசியல் கலாசாரத்தை மீள்உருவாக்கிக் கொள்வதில் காணப்படுகின்ற தடைகளை சரியாக இனங்காண்பதாகும். இது தொடர்பிலான முன்னுரிமைகள் எவ்வாறானதாக உள்ள போதிலும் கட்சியின் உள்ளேயான சனநாயகம், அரசியல் நிதியீட்டலானது குறிப்பிடத்தக்களவான தீர்மானம் மேற்கொள்ளத்தக்க செயற்பணியை நிறைவேற்றுகின்றது. இந்நாட்டின் அரசியல் கட்சிகள் உள்ளக சனநாயகத்தை பலமான மட்டத்தில் வைத்து அரசியல் நிதியீட்டல் அல்லது ஆகக் குறைந்தது தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை மட்டுப்படுத்துவதற்கான நியமங்கள் மற்றும் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருப்பின், இந்நாட்டிலுள்ள வாக்காளர்கள் விருப்பு வாக்கு முறையை புறக்கணிக்க மாட்டார்கள் என்பது எமது நம்பிக்கையாகும். செல்வவளம்மிக்க அல்லது மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் அடைந்துள்ள வேட்பாளர் ஒருவர் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று ஒரு சபைக்கு மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்படுவது துரதிஷ்டவசமான மற்றும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதொரு பிரச்சினையல்ல. இங்கு இடம்பெற வேண்டிய சரியான முறையாக இருப்பது, ஒவ்வொரு அபேட்சகருக்கும் போட்டியிடுவதற்கு உகந்த ‘‘சமவாய்ப்பை’’ உருவாக்குவதாகும்.

தேசிய மட்டத்தில் காணப்படுகின்ற அரசியல் நீரோட்டம், உள்ளூராட்சியிலும் தாக்கம் செலுத்துவது வழமையாக இடம்பெறுவதாகும். தேர்தல் முறையின் தாக்கமும் அவ்வாறுதான். 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் வெளியிடப்பட்ட தேர்தல்கள் மறுசீரமைப்பு பற்றிய பாராளுமன்ற தெரிகுழுவின் இடைக்கால அறிக்கையானது, இந்நாட்டின் ஆளுகை மட்டங்கள் மூன்றுக்கும் நடாத்தப்பட வேண்டிய தேர்தல்கள் பற்றிய தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இங்கு உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தேச சிபாரிசாக முன்னிலைப்படுத்திக் குறிப்பிடப்பட்டிருப்பது தற்காலத்தில் காணப்படுகின்ற உள்ளூராட்சி எல்லைகளை மீள நிர்ணயித்து ‘‘வட்டாரம்’’ என்ற புதிய அலகொன்றை வடிவமைப்பதும், அதுவரையான தேர்தல் முறையை மேற்படி வட்டார முறையை அடிப்படையாகக் கொண்டு நடாத்தக்கூடிய முறையொன்று தொடர்பில் கவனம் செலுத்துவதுமாகும்.

அவ்வாறான உத்தேச சிபாரிசுகள் சற்று ஊக்கமற்ற நிலையில் காணப்பட்டதுடன், சுமார் 2010 ஆம் ஆண்டளவில் மீண்டும் மேற்படி கலந்துரையாடல் போதியளவிலும், உயிரோட்டமுள்ளதாகவும் மாறியதை அவதானிக்க முடிகின்றது. இதன் பெறுபேறாக இருப்பது 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டமாகும். மேற்படி சட்டத்தின் மூலம் உத்தேச உள்ளூராட்சித் தேர்தல் முறையின் மாற்றங்கள் காலத்தின் தேவையாகும் என்று கருதியதனால் அதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் திருத்தங்கள் சகிதம் பாரிய பிரிவினைகள் இன்றி தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

<u>புதிய முறை – புதிய அணுகுமுறை</u>

இந்த சட்டத்திற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் உரித்தான போதிலும் உரிய தேர்தலை நடாத்துவது நாளுக்கு நாள் தள்ளிப்போனமையானது, சமூகத்தில் தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், விமர்சனத்திற்கும் உட்பட்டது. எனினும் இந்த ஆக்கத்தின் நோக்கமாக இருப்பது, தற்போது நடாத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் கற்றுக் கொண்ட பாடங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதாகும் என்பதனால், தேர்தல் தாமதமடைந்தமைக்குக் காரணமான விடயங்கள் பற்றி விபரிக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடாத்தி முடிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பிரதானமாக சட்டரீதியான பின்னணியாக அமைந்திருப்பது,

- உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயமான) (முதன்மைச் சட்டம்)
- 2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டம்
- 2016 இன் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டம்
- 2017 இன் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டம் மற்றும் அதற்கு விளைவாய்ந்தன்மைவாய்ந்த திருத்தச் சட்டங்கள் சில மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பிரகடனம் செய்யப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள், வழிகாட்டல்களுக்கு மேலதிகமாகவாகும். இதன் போது மிகவும் முக்கியமான கொள்கைசார் தீர்மானமாக இருப்பது கலப்பு உறுப்பினர்களைக் கொண்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையாக அறிமுகம் செய்யப்படுகின்ற தேர்தல் முறையொன்றை பயன்படுத்திக் கொள்ளும் போது பயன்படுத்திக் கொள்ள வேண்டிய விகிதாசாரமானது எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பதாகும். பல்வேறு வாதப் பிரதிவாதங்களைக் கொண்ட இந்த விடயமானது சட்ட ரீதியான ஏற்பாடொன்றாக வெளியிடப்பட்டிருப்பது 2017 இன் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலமாகும். இதன் விளைவாக வட்டாரம் மற்றும் விகிதாசார முறையானது, முறையே 60 – 40 என்ற வரையரைக்குள் தக்கவைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (எனினும் உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்ளும் போது, தெரிவு செய்துகொள்வதானது, பொதுவாக 100% விகிதாசார ரீதியில் இருக்கும்.)

**<u>தேர்தலின் பின்னரான பெறுபேறு காலம்</u>**

இவ்வாறு நடாத்தப்பட்ட வாக்கெடுப்பின் பெறுபேறுகள் வெளிவந்ததை அடுத்து, உருவாகியுள்ள தேர்தலுக்குப் பின்னரான பெறுபேறு காலமானது புதிய தேர்தலின் சாதகமான, பாதகமான தன்மைகளை அளவிடுகின்ற அளவுகோளாக இருப்பதுடன், அது பற்றிய அறிவைக் கொண்ட ஒரு சிலர் தவிர பெரும்பாலானோர் உருவாக்க முயற்சித்துள்ள கருத்துக்கள் இவ்வாறானதாகும். அதாவது, புதிய தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டு, ஒட்டுமொத்த அரசியல் சூழலையும் மென்மேலும் குழப்பத்திற்கு இட்டுச் செல்கின்றது என்றும் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கியுள்ள சந்தர்ப்பமானது செயற்கையாக உருவாக்கப்பட்டதுள்ளது என்பதாகும். மேலும்,

உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படுவது என்பது தேசிய நிதியை வீண்விரயமாக்குவதற்கு திறந்துவைக்கப்பட்ட மற்றொரு வாய்ப்பு என்பதாகும். அத்துடன், பிரதான அரசியல் கட்சிகளுக்கு உறுதியான அதிகாரம் கிடைக்காதவாறு தயார் செய்யப்பட்டுள்ள புதிய அரசியல் முறையானது நிலையான சபையொன்றை பேணிவருவதற்கு ஊக்கமளிப்பதாக இல்லை என்பதாகும். அதுமாத்திரமன்றி உள்ளூராட்சி மன்றத் தலைவர்களை தெரிவு செய்யும் முறையினை, பணத்துக்கு காட்டிக் கொடுப்பதற்கு இப்புதிய முறை மூலம் வாய்ப்பு உருவாகியுள்ளது என்று எழுகின்ற குற்றச்சாட்டுக்களும் அதிகமாகும். எவ்வாறான சாதகமான பண்புகள் காணப்படுகின்ற போதிலும் தேர்தலின் பின்னரான பெறுபேறு காலத்தில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்த மேற்படி கருத்துக்கள், மேல்வாரியாகப் பார்க்கும் போது வாக்காளர்களின் ஊக்கத்தை இழக்கச் செய்கின்ற கூற்றுக்களாகும் என்பதுடன், புதிய முறை ஊடாக உருவாக்கப்பட்டுள்ள எவ்வித நற்பண்புகளும் இல்லை என்று யாராயினும் உணர்வார்களாயின் அதுவும் ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. மேலுள்ள விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் பதில் அளிப்பதானது இந்த ஆவணத்தை மென்மேலும் நீளச் செய்வதனால் பொதுவாக கருத்துரை வழங்குவது மாத்திரம் இங்கு மேற்கொள்ளப்படும்.

புதிய தேர்தல் முறை தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடல்கள் மற்றும் கருத்து ஆராய்கைகள் ஊடாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் அவதானிப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொண்ட செயற்பணிகளை கருத முடிவது இலகுபடுத்துவோராக மற்றும் மேற்படி ஆட்களை இனங்காண வேண்டியது இப்புதிய தேர்தல் முறையை அவ்வாறு ஏற்றுக் கொண்டு அதனை மேம்படுத்தும் பணிக்கு தோள்கொடுத்தவர்களாக அல்ல. இது தொடர்பில் மிகவும் பரந்தளவில் கலந்துரையாடப்பட்டு தேவையான கொள்கைசார் தீர்மானங்கள் சட்டவாக்கத்தின் உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்டது. எனவே இப்புதிய முறை ஊடாக உருவாக்கப்பட்ட தாக்கத்தின் பெருமை அல்லது ஏதும் குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தரப்பினராக இருப்பது அரசியல் கட்சிகள் உள்ளிட்ட சட்டவாக்கத்தின் பிரதிநிதிகளாவார்கள்.

<u>**ஓரங்கட்டும் சனநாயகம்**</u>

பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் எழுகின்ற குற்றச்சாட்டுக்களை நோக்கும் போது தெரியவருவது இலங்கையானது இன்றும், “ஓரங்கட்டும் சனநாயத்தில்” இருந்தவாறு தீர்மானம் மேற்கொள்கின்றது என்பதாகும். பேராசிரியர் ஜயதேவ உயங்கொட இது பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை ஆராய்வது இங்கு முக்கியமானதாகும். அவர் குறிப்பிடுகின்ற ஒரு கருத்தாக இருப்பது, “இல்லாதோருக்கு தீமை ஏற்படுகின்ற, உள்ளவர்களுக்கு நன்மை பயக்கின்ற சமனற்ற நிலைமையை” (unequal – equality) ஏற்படுத்துகின்றவாறான லிபரல் சமஅந்தஸ்துக் கோட்பாடுகளுக்குப் பதிலாக “இல்லாதோருக்கும் நன்மையைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய சாதகமான தன்மையைக் கொண்டதான சமனற்ற – சமநிலையான (positive unequal- equality) தன்மையைக் கொண்ட அரச கொள்கையை உருவாக்க வேண்டும் என்பதாகும். இதன் போது ஒரு மாற்றுவழிமுறையாக இருப்பது இவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பங்கீடாகும். அது மாத்திரமன்றி பெண்கள் பிரதிநிதித்துவத்தை எவ்வகையிலும் அடைந்துகொள்ள முடியாது என்று

குறிப்பிட்டு பாரியளவில் இக்காலப்பகுதியில் கூக்குரல் இடப்பட்டது, எனினும் இன்று உருவாகியுள்ள பின்னணியானது மனங்கவரக்கூடியதாகும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்காக பதில் நடவடிக்கையாக அரசியல் கட்சிகள், பெண் உறுப்பினர்களை பெயர் குறித்ததுடன், தற்போது வெளிவந்துள்ள புள்ளிவிபரங்களை ஆராயும் போது தெளிவாகும் விடயம், பெண்களின் பிரதிநிதித்துவத்துக்கு மிகவும் பலமானதொரு அடிப்படை இதன் மூலம் உருவாகியுள்ளது என்பதாகும். பின்வரும் தரவுகளை ஆராய்வதன் மூலம் இதனை உறுதி செய்துகொள்ள முடியும்.

<u>**பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டுள்ள முறை :**</u>

| **மாவட்டங்களின் எண்ணிக்கை** | **முதலாவது வேட்புமனுவின் மூலம் தாக்கல் செய்ய வேண்டிய ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை** | **வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை** | **மேலதிக வேட்புமனுவின் மூலம் தாக்கல் செய்ய வேண்டிய ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை** | **பட்டியல் மூலம் பெயரிடப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 25 | 696 | 535 | 1998 | 1984 |

- தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதி செய்யாத தரவுகளின் அடிப்படையில் இந்த அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

புதிய தேர்தல் முறையின் கீழ் இவ்வளவு பாரிய எண்ணிக்கையான உறுப்பினர்களின் எண்ணிக்கையை உள்ளடக்குவதற்குத் தாக்கம் செலுத்திய பிரதான காரணியாக இருப்பது கலப்புத் தேர்தல் முறையின் மூலம் உருவாக்கப்பட்ட வாய்ப்பாகும் என்பது இரகசியமானதல்ல. எனினும், எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது வேறு கண்ணுக்கெட்டாத சக்தியினால் ஏற்பட்டதன்றி பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் மற்றும் அறிந்த நிலையில் இடம்பெற்றதாகும். அவ்வாறு உறுப்பினர்கள் எண்ணிக்கை ரீதியாக அதிகரித்துள்ள போதிலும் முறையான முகாமைத்துவத்தைப் பயன்படுத்தி மேற்படி சகல உறுப்பினர்களுக்கும் வசதிகளை செய்துகொடுக்க முடியாது என்ற வாதத்தை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. உள்ளூராட்சி மன்றங்கள் என்பது வருமானம் உழைக்கக்கூடிய வகையில் தாபிக்கப்பட்டுள்ள சுயாதீனமான நிறுவன வகையாகும். முறையான அறிவுப்பூர்வமான வழிகாட்டல்களைக் கொண்ட தலைமைத்துவத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களை, வருமான மூலங்களாக மாற்றியமைப்பது அவ்வளவு கடினமான விடயமாக இருக்க முடியாது.

இங்கு எழுகின்ற மற்றைய சிக்கலாக இருப்பது, உள்ளூராட்சி மன்றத் தலைவர்களைத் தெரிவு செய்துகொள்வதும், நிலைபேறான உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்கிக் கொள்வதும் தொடர்பிலான சிக்கலாகும். இப்புதிய தேர்தல் முறையை அறிமுகம் செய்வதற்கு முன்னர்

இடம்பெற்ற கலந்துரையாடல்கள் மையப்படுத்திய விடயமாக இருப்பது, இருகட்சி முறையைக் கொண்ட பிரதான அரசியல் கட்சிகள் மாத்திரம் பலம்மிக்கதாகின்ற முறையியல் எவ்வகையிலும் சனநாயக ரீதியான ஆட்சி முறைக்கு சாதகமானதல்ல என்பதாகும். எனினும், இன்று உருவாகியுள்ள நிலைமையில் எழுப்பப்படுகின்ற வாதமாக இருப்பது, ஒரு அரசியல் கட்சி பலமடையாமையினால் சபைகள் ஸ்திரமற்றதாக உள்ளன என்பதாகும். நடைமுறையில் இங்கு சிக்கலொன்று உள்ளதென்பது தெரியவருகின்ற போதிலும், இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளும் சகலரும் கருத்துரீதியாக மறந்துவிடுகின்ற ஒரு உண்மை உள்ளது. அதாவது, இந்நாட்டில் உள்ளூராட்சி மன்றங்கள் உருவாகியிருப்பது கட்சி அரசியலின் போர்க்களமாக அன்றி ஆகக் குறைந்த கட்சி அரசியல் விருப்பத்தைக் கொண்ட சபை முறையாகவாகும். எனினும் அண்மைக் காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தீவிரமாக அரசியல்மயமானதுடன், மேற்படி கோட்பாடும் படிப்படியாக மூடிமறைக்கப்படுகின்ற நிலைமை தென்பட்டது. மக்கள் சேவையும், தீவிர அரசியல் விருப்பத்துக்கும் இடையே குறிப்பிட்டதொரு எல்லையை அடையாளப்படுத்திக் கொள்ள முடியாத ஆட்களுக்கு எந்தவகையிலான தேர்தல் முறையை பெற்றுக் கொடுப்பினும் அதன் மூலம் பயன் கிடைக்குமா என்பதை இதற்கமைய சிந்தித்துப் பார்க்க வேண்டும். யாராயினுமொரு உறுப்பினர் ஒருவர் பணத்துக்காக அரசியல் கட்சியின் தீர்மானங்களை காட்டிக் கொடுப்பார்கள் என்பதானது உள்ளக சனநாயகம் அவ்வவ் அரசியல் கட்சிகளில் இல்லை என்பதற்கான சிறந்த காரணியொன்றாகும்.

<u>சுய விருப்பமும், கட்சி அரசியலும்</u>

இதற்கமைய தெரியவருகின்ற விடயமாக இருப்பது இப்புதிய தேர்தல் முறை காரணமாக மென்மேலும் வெளிப்படுத்தப்பட்டிருப்பது அரசியல் கட்சிகளின் சனநாயகத்தின் பலவீனம் என்பதாகும். மேலும் யாராயினுமொரு உறுப்பினர் அரசியல் கட்சியின் தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்படும் போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் புதிய தேர்தல் சட்டத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது பின்வருமாறாகும்.

10 அ. (1) யாதாயினுமொரு உள்ளூராட்சி மன்றமொன்றின் உறுப்பினராக தெரிவு செய்துகொள்வதற்காக வேட்பாளராக யாதாயினுமொரு அரசியல் கட்சியின் வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள யாராயினும் ஆளொருவர் அக்கட்சியின் அங்கத்தவராக இருப்பது நிறைவுசெய்யப்பட்டுள்ளது என்று, அவ் உள்ளூராட்சி மன்றம் அமைந்திருப்பது எந்த மாவட்டத்திலோ, அம்மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அதிகாரி திருப்தியடையும் பட்சத்தில் அத்தெரிவத்தாட்சி அதிகாரியினால், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலின் மூலம் அவ்ஆள் -

(அ) குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினராக தெரிவு செய்துகொள்ளப்பட்டிருப்பின், அவ் ஆள் தமது உறுப்பினர் பதவியை கைவிட்டுள்ளதாக அல்லது,

(ஆ) ஏதேனுமொரு வெற்றிடத்தை நிரப்புவதற்காக குறித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்புமனுவில் தமது பெயரை வைத்திருப்பதற்கான தமது உரிமையை இழந்திருப்பதாக,

பிரகடனம் செய்யப்படல் வேண்டும். இதற்கமைய அவ்வாறான பிரகடனம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, குறித்த ஆள் அவ் உள்ளூராட்சி மன்றத்தில் உறுப்பினராக வகித்த தமது பதவியை கைவிட்டுவிடல் வேண்டும்.

வழிகாட்டல்கள் இருந்தும் அதனைப் பயன்படுத்தாத அரசியல் கலாசாரத்திலிருந்தவாறு தேர்தல் முறையை விமர்சிப்பதானது எந்தளவுக்கு நகைப்புக்குரியது என்பதை, அரசியல் கட்சிகள் மேற்படி சட்ட ஏற்பாடுகளை கண்டும் காணாததைப் போன்று செயற்படுவதை பார்க்கும் போது புரிந்துகொள்ள முடிகின்றது. அதிகார அரசியல் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிநிரல்களுக்கு இடையிலான இடைவெளி பரந்ததாக உள்ளதனால் இவ்வாறான சட்டங்களை பயன்படுத்திக் கொள்வது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என்று எவரும் வாதிட முடியும். எனினும் எவரும் தாமே அறிமுகம் செய்து நிறைவேற்றிக் கொண்டுள்ள சட்டங்களை அமுல்படுத்தவில்லை எனின், இதற்கு தேர்தல் முறையை பழிக்கடாவாக்கத் தேவையில்லை என்பதை வலியுறுத்த வேண்டும். புதிய தேர்தல் முறையை பரீட்சித்துப் பார்க்கும் போது இடம்பெறக்கூடிய தனித்துவமான பலவீனங்கள் இங்கு வெளிப்படுத்தப்பட்டதுடன், வேறொரு சந்தர்ப்பத்தில் இந்தப் பலவீனம் மீண்டுமொரு தடவை வெளிப்படுத்தப்படுகின்ற போதிலும் அவ்வாறு இடம்பெற முடிவது மிகக் குறைவாகவேயாகும். இதற்கான காரணம் இப்புதிய அனுபவங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் அவ்வாறான சந்தர்ப்பத்தில் காணப்படுவதாகும்.

**<u>எதிர்கால நோக்கு</u>**

புதிய தேர்தல் முறையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள பெறுபேறுகளையும் தாண்டி தேர்தல்கள் சம்பந்தமான தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தி புதிய முறையின் வடிவம் பற்றி வினவுவதை நிறுத்துவது மிகவும் பொருத்தமானது என்பது இங்கு தெரியவருகின்றது. உதாரணமாக தவிசாளர்களை தெரிவு செய்துகொள்ளும் முறையியலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு முறையாக இருப்பது சீட்டிழுப்பு முறையாகும். இதனை மிகைப்படுத்தி மேற்படி விடயமானது, புதிய தேர்தல் முறையை விமர்சிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இந்த விமர்சகர்கள் அறியாதுள்ள ஒரு விடயமாக இருப்பது சனாதிபதியைத் தெரிவு செய்கின்ற முறையியலில் கூட மேற்படி முறை உள்ளடங்குகின்றது என்பதாகும். இப்புதிய தேர்தல் முறையில் காணப்படுகின்ற ஏனைய அடிப்படை பண்புகள் மற்றும் அவற்றின் மூலம் மக்களின் கருத்துக்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பது பற்றி எதிர்காலத்தில் விளக்கமளிக்கப்படவுள்ளது. எனினும், ‘‘ஒவ்வொரு வாக்குக்கும் சமமான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக’’ கலப்பு உறுப்பினர் பிரதிநிதித்துவ முறையைத் தவிர வேறு எந்தவொரு முறைக்கும் இயலுமாகும் என்று நினைப்பது கடினமான விடயமாகும்.

மிகவும் முக்கியமான விடயமாக இருப்பது, பரந்தளவான விமர்சன ரீதியான அறிவுடன் உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றி ஆராய்ந்து கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். இது எதிர்கால மாகாண சபைகள் தேர்தலை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்குக் காரணமாகும் விடயமாகும். அவ்வாறான கலந்துரையாடல்களின் போது அதிக கவனம் செலுத்த வேண்டிய ஒரு சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- மேலதிகப் பட்டியலின் கீழ் பெயர் குறிப்பிடுவதற்கு கட்சிப் பொதுச் செயலாளருக்கு உரித்தான தத்துவம்.
- பெண்களின் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குவதற்காக விதிக்கப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் விடுவித்தல்கள் (உதாரணமாக : 20% ஆன விகிதம் மற்றும் உறுப்பினர்கள் 3 இற்குக் குறைவாகப் பெற்றுக் கொள்ளும் கட்சிகளுக்கு பெண்களின் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்காதிருத்தல்.)
- 50 இற்கு 50 எனும் விகிதாசாரத்தைக் கொண்ட கலப்புத் தேர்தல் முறையில் தொங்கல் :over hang* ஆசனங்களின் எண்ணிக்கை எவ்வாறானதாக இருக்கும் என்பது அல்லது அதற்கு எதிராக முன்னர் காணப்பட்ட முறையின் கீழ் மேலதிக பட்டியல் மூலமான ஆசனம் (Bonus) வழங்குதல்.
- வெட்டுப்புள்ளி விகிதத்தை (முன்னர் காணப்பட்ட 5% ஆன விகிதமாகும்) மீண்டும் அறிமுகம் செய்தல் அல்லது அதற்கான மாற்று வழிமுறைகள்.

இவ்வாறு உருவாக்கப்பட்டிருப்பது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தக்கூடிய பின்னணியாகும் என்பதுடன், மாகாண சபைகள் தேர்தலை நடாத்துவதற்கு முன்னர் மேலுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. மேலும், உள்ளூராட்சித் தேர்தலுக்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கலப்பு உறுப்பினர் பிரதிநிதி முறையினை மென்மேலும் வெற்றிகரமாக அமுல்படுத்த வேண்டுமாயின், மேற்கொள்ள வேண்டிய முன்னுரிமை பணியாக இருப்பது, இரண்டு வாக்குச்சீட்டுக்களை வாக்காளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் முறையை நோக்கிப் பயணிப்பதாகும். இதன் மூலம் தமது விருப்பத்திற்கு அமைய அபேட்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளைத் தெரிவு செய்துகொள்ளும் வரம் வாக்காளருக்கு உரித்தாவதுடன், மக்களின் கருத்துக்களை அவ்வாறே மீளக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பும் உருவாகும். அவ்வாறு இடம்பெறாத வரை இவ்வாறானதொரு முறையானது, ‘‘தலை இல்லாத முண்டத்துக்கு சமமானதாகும்’’. கலந்துரையாடல்களின் ஊடாக செயற்பட முனைவது சகலரினதும் நலனுக்குக் காரணமாக அமையும்.

***ஆக்கம் : சட்டத்தரணி திருமதி கயனி பிரேமதிலக்க மற்றும் திரு மஞ்சுல கஜநாயக்க, தேசிய ஒருங்கிணைப்பாளர், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV)***